Registered as a News Paper
பக்கங்கள் 04
விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Pepoles Daily
மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | சித்திரை 05 | [18-04-93] | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 59

Y.M.C.A

## மோட்டார் ஊர்திப் பதிவு மேற்கொள்ள நடவடிக்கை

மோட்டார் ஊர்திகளைப் பதிவு செய்யும் நடைமுறை ஒழுங்கு ஒன்றை போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் செயற்படுத்த உள்ளனர். மக்களைப் பாதிக்கும் அனைத்துக் குற்றச் செயல்களிலிருந்தும் பாதுகாப்பு அளிப்பதுடன் வாகன மோசடிச் செயற்பாடுகளை முடிந்தவரை தவிர்க்கப்படவேண்டும் என்பத னையும் கருத்திற் கொண்டே இந் நடமுறை ஒழுங்கு மேற்கொள்ளப்படுகிறதென போக்குவரத்து கண்கர்ணிப்புப் பிரிவினர் அறிவித் (4ஆம் பக்கம் பார்க்க)

## இனப் பிரச்சினைக்குத் தீர்வு

# கிழக்கு மாகாணத்தை பிரித்து முதல் வெற்றி பெறவேண்டும்

### தெரிவுக்குழுத் தலைவர் தெரிவிப்பு

(லண்டன்)

"கிழக்கு மாகாணத்தினை பயங்கரவாதத்திலிருந்து விடுவித்து அங்கு சமாதானத்தை ஏற்படுத்தி புனர் நிர்மாணம் செய்து அபிவிருத்தி செய்து போராட்டத்தில் வெற்றிபெற வேண்டும். இதன் மூலம் இலங்கையின் பெரும்பகுதியில் சமாதான நிலை ஏற்படும் என நான் கருதுகிறேன்." என இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து ஆராயவென நியமிக்கப்பட்ட பாராளு மன்றத் தெரிவுக் குழுவின் தலைவர் திரு. மங்கள முனசிங்கா பி. பி. ஸிக்கு அளித்த தொலைபேசி பேட்டியின் போது தெரிவித்தார்.

சிங்கள - தமிழ்க் கட்சிகள் இடையே கருத்துவேற்றுமையை உருவாக்கியுள்ள வடக்கு, கிழக்கைப் பிரிக்கும் தீர்வுத் திட்டத்தை முன் வைத்துள்ள நிலையில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் இன்றைய திட்டம் என்ன? என்ற கேள்விக்கு விடை அளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், 'பாராளுமன்றத்தெரிவுக்குழு இந்திய மாநிலங்களுக்கு உள்ள அதிகாரங்களை வழங்கும் அதேவேளை வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தனித்தனி மாகாணங்களாகக் கருதவேண்டும் என்று கூறுகிறது. நீண்ட கால அமர்வின்பின்னர் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு முதலில் கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்தி போராட்டத்தில் முதல் வெற்றிபெறவேண்டும்' என்றார்.

விடுதலைப் புலிகளுடன்பேச வேண்டும் என வெளிவரும் கருத்துக்கள் குறித்து உங்கள் நிலைப்பாடு என்ன? என்ற கேள்விக்குப் பதிலளித்த மங்கள முனசிங்க 'இது தெரிவுக் குழு எடுக்கவேண்டிய முடிவு' எனத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தெரிவுக் குழுவில் கலந்து கொண்ட அநேக சிங்கள - முஸ்லிம் உறுப்பினர்கள் வடக்கு, கிழக்கு இணைப்பு அவசரகாலச் சட்ட விதிகளின் கீழேயே இணைக்கப்பட்டுள்ளது. எனவே வடக்கு, கிழக்கைப் பிரித்துவிட வேண்டும்" எனக்கருத்துத் தெரிவித்தனர். ஆனால் கிழக்கு மாகாணத்தில் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடாத்தி அங்குள்ள மக்கள் விரும்பினால் வடக்கு, கிழக்கை இணைக்கலாம்" என்றார்.

### சிங்களக் குழுவாக மாறிவிட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு

#### பி. பி. ஸி விமர்சனம்

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒரு சிங்களக் குழுவாக மாறிவிட்டது என பி. பி. ஸி தனது விமர்சனத்தில் தெரிவித்தது சிங்கள - தமிழ் உறுப்பினர்களுடன் நீண்ட காலமாக தீர்வுத்திட்டம் குறி த்து ஆராய்ந்துவந்த தெரிவுக் குழு தமிழ் உறுப்பினர்கள் வெளியேறிய நிலையில் ஒரு சிங்களக் குழுவாக மாறிவிட்டது என மேலும்தெரிவித்தது.

### லொஸ் ஏஞ்சல் சம்பவம் இரு அதிகாரிகள் குற்றவாளி

(கொழும்பு)

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம்லொஸ்ஏஞ்சல்ஸில்கறுப்பினத்தைச் சார்ந்த சாரதி ஒருவர் மீது குடியுரிமையை மீறும்வகையில் நடைபெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் பொலிஸ் சாரதி ஒருவரும்

## க. பொ. த. [உ/த] பரீட்சை

### பெறுபேறு மீளாய்வு விண்ணப்பமுடிவு அறிவிப்பு

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் முடிவுகளை மீளப்பரிசீலிப்பதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி அடுத்த மாதம் முப்பதாம் திகதியாகும். பத்திரிகைகளில் திணைக்களம் வெளியிட்டிருக்கும் மாதிரிப் படிவங்களுக்கேற்ப தயாரிக்கப்படும் விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஒரு பரீட்சார்த்திக்கு 2 பரீட்சை நிலையங்கள்

[யாழ்ப்பாணம்]

சங்கீதம், நடனம் ஆகிய செய்முறைப் பரீட்சைக்கு வழங்கப்பட்ட பாடசாலைப் பரீட்சார்த்திகள் சிலரின் அனுமதி அட்டைகளில் இரண்டு பரீட்சை நிலையங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

க. பொ. த. (சா/த)-1992 டிசம்பரிற்கான இப் பரீட்சை எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாக இருக்கின்றது.

இதனைத் தொடர்ந்துபரீட் [4 ஆம் பக்கம் பார்க்க]

## அன்னை பூபதி நினைவு 5 ஆம் ஆண்டு எழுச்சி நாள்

### உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தாயக விடுதலைக்காக தன்னுயிரைத் தியாகம் செய்த தியாகி அன்னை பூபதியின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாட்களின் நிறைவு தினம் தமிழீழமெங்கும் நாளை எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. இனவாத சிங்கள அரசுக்கெதிராகவும், இந்திய ஆக்கிரமிப்புப் படைகளுக்கெதிராகவும் அகிம்சைப் போராட்டம் நடாத்தி தியாக மரணமடைந்த தியாகி பூபதி கணபதிப்பிள்ளையின் நினைவு நாட்கள் கடந்த ஒரு மாத காலமாக தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும் அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது.

கடந்த ஒரு மாதகாலப் பகுதியிலும் தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளும் எழுச்சிக்கோலமாகக் கட்சியளிக்கிறது. யாழ். குடாநாட்டில் உள்ள பொது நிறுவனங்கள், சமூகசேவை அமைப்புக்கள், சனசமூகநிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்கள் போன்றவற்றிலும் விடுதலைப் புலிகளின் அலுவலகங்கள்,பாசறைகள் போன்றவற்றிலும் அலங்கரிக்கப்பட்ட விசேட பந்தல்களில் தியாகி அன்னை பூபதியின் உருவப்படம் வைக்கப்பட்டிருந்தது. இப்படத்துக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டும் அணையாத தீபங்கள் ஏற்றிவைக்கப்பட்டும் இருந்தது. இப்பந்தல்களில் தினசரி மக்கள் அஞ்சலி செலுத்திச் செல்வதையும் அவதானிக்க முடிந்தது. அதேவேளை பிரதானவீதிகளின் பல்வேறு பகுதிகளிலும் சிவப்பு, மஞ்சல் வர்ணத் தோரணங்கள் கட்டப்பட்டிருக்கிறது. வீதியின் குறுக்கே எழுச்சியூட்டும் கோசங்கள் அடங்கிய பதாகைகள் கட்டப்பட்டிருக்கின்றன.

மேலும் தியாகி பூபதியின் நினைவாக பல்வேறு இடங்களில் சிரமதான நிகழ்வுகளும், அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளும் இடம்பெற்றுவருகிறது.

யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் கடந்த 16ஆம் திகதி முதல் தொடர் உண்ணாவிரத நிகழ்வு நடைபெற்று வருகிறது இந்த அடையாள உண்ணாவிரத நிகழ்விலும் சிரமதானப் பணிகளி

### அன்னை பூபதி நினைவு

தெரிவித்தார்.

சிங்கள - தமிழ்க் கட்சிகள் இடையே கருத்துவேற்றுமையை உருவாக்கியுள்ள வடக்கு, கிழக்கைப் பிரிக்கும் தீர்வுத் திட்டத்தை முன் வைத்துள்ள நிலையில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் இன்றைய திட்டம் என்ன? என்ற கேள்விக்கு விடை அளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், 'பாராளுமன்றத்தெரிவுக்குழு இந்திய மாநிலங்களுக்கு உள்ள அதிகாரங்களை வழங்கும் அதேவேளை வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தனித்தனி மாகாணங்களாகக் கருதவேண்டும் என்று கூறுகிறது. நீண்டகால அமர்வின்பின்னர் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு முதலில் கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்தி போராட்டத்தில் முதல் வெற்றிபெறவேண்டும்' என்றார்.

விடுதலைப் புலிகளுடன்பேச வேண்டும் என வெளிவரும் கருத்துக்கள் குறித்து உங்கள் நிலைப்பாடு என்ன? என்ற கேள்விக்குப் பதிலளித்த மங்கள முனசிங்க 'இது தெரிவுக்குழு எடுக்கவேண்டிய முடிவு' எனத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''தெரிவுக் குழுவில் கலந்து கொண்ட அநேக சிங்கள - முஸ்லிம் உறுப்பினர்கள் வடக்கு, கிழக்கு இணைப்பு அவசரகாலச் சட்ட விதிகளின் கீழேயே இணைக்கப்பட்டுள்ளது. எனவே வடக்கு, கிழக்கைப் பிரித்துவிட வேண்டும்'' எனக்கருத்துத் தெரிவித்தனர். ஆனால் கிழக்கு மாகாணத்தில் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடாத்தி அங்குள்ள மக்கள் விரும்பினால் வடக்கு, கிழக்கை இணைக்கலாம்'' என்றார்.

## சிங்களக்குழுவாக மாறிவிட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு

### பி. பி. ஸி விமர்சனம்

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒரு சிங்களக் குழுவாக மாறிவிட்டது என பி. பி. ஸி தனது விமர்சனத்தில் தெரிவித்தது சிங்கள - தமிழ் உறுப்பினர்களுடன் நீண்டகாலமாக தீர்வுத்திட்டம் குறித்து ஆராய்ந்துவந்த தெரிவுக்குழு தமிழ் உறுப்பினர்கள் வெளியேறிய நிலையில் ஒரு சிங்களக் குழுவாக மாறிவிட்டது என மேலும்தெரிவித்தது.

## லொஸ் ஏஞ்சல் சம்பவம் இரு அதிகாரிகள் குற்றவாளி

(கொழும்பு)

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம்லொஸ்ஏஞ்சல்ஸில்கறுப்பினத்தைச் சார்ந்த சாரதி ஒருவர் மீது குடியுரிமையை மீறும்வகையில் நடைபெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் பொலிஸ் சாரதி ஒருவரும் மற்றுமொரு அதிகாரியும் குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களைவிட குற்றம் சாட்டப்பட்ட வேறு இரு உத்தியோகத்தர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். சமஷ்டி நீதிமன்றத்தில் இக் குற்றச்சாட்டு சம்பந்தமான விசாரணை விரைவில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட

[4 ஆம் பக்கம் பார்க்க]

# முக்கிய ஓர் இலக்கோடு புலிகள் உறுப்பினராம்

## வாழப்பாடி தகவல்

(சென்னை)

முக்கிய ஓர் இலக்கோடு விடுதலைப் புலிகள் இயக்கத்தைச்சேர்ந்த முக்கிய உறுப்பினர் ஒருவர் தமிழகம் வந்திருப்பதாக தமக்கு உறுதியான தகவல் கிடைத்திருப்பதாக வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கை குறித்து மாநில அரசு மெத்தனமாக இருக்கக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாரதீய ஜனதாவுடன் தேர்தல் உறவு வைத்துக் கொள்ளும் விடயத்தில் அ. இ. அ. தி. மு. கழக பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா உண்மை நிலையை மறைக்கிறார் என்றும் வாழப்பாடி இராமமூர்த்தி குற்றம் சாட்டினார்.

மேலும் பழனி, இராணிப்பேட்டை தேர்தல் தொகுதிகளில் நடைபெற இருக்கும் உப தேர்தல்களில் வெற்றி பெறுவதற்காகவே பாரதீய ஜனதாவுடன் உறவு இல்லை என்று செல்வி ஜெயலலிதா கூறுவதாக பாரதீய ஜனதாக் கட்சி பொதுச் செயலாளர் திரு. கோவிந்தாச்சாரியார் கூறியிருப்பதில் இருந்து இது அம்பலமாகிவிட்டது என்றும் சென்னையில் செய்தியாளரிடையே பேசுகையில் அவர் தெரிவித்தார்.

## சுப்பிரமணியம் சுவாமி அவதூறு வழக்கு

# டில்லி நீதிமன்றில் ஆஜராக ஜெயலலிதாவிற்கு உத்தரவு

(டில்லி)

தமிழ் நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவை நீதிமன்றத்தில் ஆஜராகும்படி டில்லி நீதிமன்றம் ஆணை பிறப்பித்துள்ளது. ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம்சுவாமி தொடர்ந்த அவதூறு வழக்குத் தொடர்பாகவே டில்லி பெருநகர் நீதிமன்ற நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

நீதிமன்ற உத்தரவின்படி எதிர்வரும் ஜூலை 9-ம் திகதி ஜெயலலிதா நீதிமன்றில் ஆஜராக வேண்டும்.

இந்தியா ருடே இதழுக்கு செல்வி ஜெயலலிதா அளித்த பேட்டியொன்றில் சுப்பிரமணியம்சுவாமி குறித்து ஜெயலலிதா தெரிவித்த கருத்துத் தொடர்பாகவே இவ்வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

சுப்பிரமணியம்சுவாமி தொடர்ந்த இவ்வழக்கை மேலெழுந்தவாரியாகப்பார்க்கும்போது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதால், பேட்டியளித்த தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவும், அதனைப் பிரசுரித்த இந்தியா ருடே பத்திரிகையாளர்கள் மூவரும்விசாரிக்கப்படுவதற்காக நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டும் என நீதிபதி தெரிவித்துள்ளார்.

முன்னர் இந்தியா ருடே இதழுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அளித்தபேட்டியொன்றில்,

தமக்குத் தருவதாகக் கூறி முன்னாள்பிரதமர் சந்திரசேகரிடம் பெருந்தொகைப் பணத்தைச் சுப்பிரமணியம்சுவாமி பெற்றுக்கொண்டதாகக் கூறியிருந்தார்.

ஜெயலலிதாவின் இக்கூற்று தமது புகழுக்குக் களங்கம் விளைவித்துவிட்டதாகக் கூறி டாக்டர்சுப்பிரமணியம்சுவாமி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வீரச்சாவு



லெப். அன்பழகன் (கிருபன்)

நேற்று முன்தினம் மாலை 5 30 மணியளவில் இயக்கச்சி புகையிரத வீதிக்கும் பிரதான வீதிக்கும் இடையில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிமோதலில் ஒரு விடுதலைப் புலிகள் போராளி வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவு அடைந்த லெப்டினன்ட் அன்பழகன் / கிருபன் (முருகன் ரவி, பெரிய புலோ நெல்லியான் வீதி, சுழிபுரம்) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தாயக விடுதலைக்காக தன்னுயிரைத் தியாகம் செய்த தியாகி அன்னை பூபதியின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாட்களின் நிறைவு தினம் தமிழீழமெங்கும் நாளை எழுச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. இனவாத சிங்கள அரசுக்கெதிராகவும், இந்திய ஆக்கிரமிப்புப் படைகளுக்கெதிராகவும் அகிம்சைப் போராட்டம் நடாத்தி தியாக மரணமடைந்த தியாகி பூபதி கணபதிப்பிள்ளையின் நினைவு நாட்கள் கடந்த ஒரு மாதகாலமாக தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும் அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது.

கடந்த ஒரு மாத காலப் பகுதியிலும் தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளும் எழுச்சிக்கோலமாகக் கட்சியளிக்கிறது. யாழ். குடாநாட்டில் உள்ள பொது நிறுவனங்கள், சமூகசேவை அமைப்புக்கள், சனசமூகநிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்கள் போன்றவற்றிலும் விடுதலைப் புலிகளின் அலுவலகங்கள், பாசறைகள் போன்றவற்றிலும் அலங்கரிக்கப்பட்ட விசேட பந்தல்களில் தியாகி அன்னை பூபதியின் உருவப்படம் வைக்கப்பட்டிருந்தது. இப்படத்துக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டும் அணையாத தீபங்கள் ஏற்றி வைக்கப்பட்டும் இருந்தது. இப்பந்தல்களில் தினசரி மக்கள் அஞ்சலி செலுத்தச் சந்தர்ப்பமும் அளிக்க முடிந்தது. அதேவேளை பிரதானவீதிகளின் பல்வேறு பகுதிகளிலும் சிவப்பு, மஞ்சல் வர்ணத் தோரணங்கள் கட்டப்பட்டிருக்கிறது. வீதியின் குறுக்கே எழுச்சியூட்டும் கோசங்கள் அடங்கிய பதாகைகள் கட்டப்பட்டிருக்கின்றன.

மேலும் தியாகி பூபதியின் நினைவாக பல்வேறு இடங்களில் சிரமதான நிகழ்வுகளும், அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளும் இடம்பெற்றுவருகிறது.

யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் கடந்த 16ஆம் திகதி முதல் தொடர் உண்ணாவிரத நிகழ்வு நடைபெற்று வருகிறது இந்த அடையாள உண்ணாவிரத நிகழ்விலும் சிரமதானப் பணிகளிலும் அதிகளவு மக்கள் ஆர்வத்துடன் பங்குபற்றி வருகின்றனர். நேற்று முதல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டுவருகிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதி நினைவு கூட்டமும், கலைநிகழ்வும்

தியாகி அன்னை பூபதியை நினைவு கூரும் முகமாக இன்று மாலை 7.00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில் நினைவு உரை, சிறப்பு உரை, ''தியாகச் சுடர்'' வில்லிசை, ''அன்னை பூபதியின் போர்'' எனும் நாட்டிய நாடகம், அருணா இசைக்குழுவின் மெல்லிசை நிகழ்வு என்பன இடம்பெறவுள்ளன.

நாளை மாலை 7.00 மணிக்கு, நினைவுரை, சிறப்புரை, வில்லிசை, நாட்டிய நாடகம் என்பனவற்றுடன் மட்டு அம்பாறை கலைஞர்களின் மெல்லிசை நிகழ்வும் இடம்பெறும்.

## "குமண" இன்று வரும்

(யாழ்ப்பாணம்)

சிகிச்சைக்கு கொழும்பு செல்லும் நோயாளரை திருக்கோணமலையில் இறக்கிவிட்டு இன்று 'குமண' கப்பல் பருத்தித்துறையை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இக் கப்பல் ஏற்கனவே யாழ். குடாநாட்டிற்கு எடுத்துவரப்பட்ட ஒரு தொகுதி உணவுப் பொருள்களை பருத்தித்துறையில் இறக்கிவிட்டு மிகுதி பொருள்களுடன் நோயாளரை ஏற்றிக்கொண்டு திருக்கோணமலைக்குச் சென்றது.

மீண்டும் இக் கப்பல் வந்து சேர்ந்ததும் பருத்தித்துறையில் பொருள்களை இறக்கும் என தெரியவருகின்றது. (நி);(பா)

## பொது அறிவுத் தேர்வு நாளை பரிசளிப்பு விழா

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் கடந்த 30-3-93 அன்று தற்கொடையாளி அன்னை பூபதி நினைவாக வட தமிழீழப் பாடசாலைகளில் நடத்தப்பட்ட பொது அறிவுத் தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு அன்னைபூபதி நினைவு நாளான 19-4-93 அன்று மாவட்டம்தோறும் பரிசளிப்பு நிகழ்வுகள் நடைபெற இருக்கின்றன.

ஆண்டு 7,8,9,10,11,12,13 என 6 பிரிவுகளாக நடத்தப்

[3ஆம் பக்கம் பார்க்க]

## மாகாணசபை தேர்தல்; வன்முறை அதிகரிப்பு

மாகாணசபை தேர்தலில் மீண்டும் வன்முறைகள் அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது. நேற்று பகல் 12.00 மணிவரை முடிவடைந்த 72 மணிநேரத்தில் சுமார் 30க்கு மேற்பட்ட வன்முறை சம்பவங்கள் பொலிஸில் முறைபாடு செய்யப்பட்டுள்ளன.

பெலியத்த ஜனநாய ஐக்கிய தேசிய முன்னணியின் மாகணசபை வேட்பாளர் பஜரோவில் வந்த இனம் தெரியாதவர்களினால் கடத்தப்பட்டுள்ளார். சிறிலங்கா சுதந்திர கட்சியின் ஹேண பிரதேச சபை உறுப்பினர் துப்பாக்கி சூட்டிற்கு இலக்காகி மிக ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அம்பலாங்கொடை ஜனநாயக ஐக்கிய தேசியமுன்னணியின் மாகாணசபை உறுப்பினர் மீது துப்பாக்கிபிரயோகம் மேற்கொள்ளப்பட்டபோதும் அவர் மயிர்

(4ஆம் பக்கம் பார்க்க)

# முருங்கனில் விமான தாக்கு ஒருவர் பலி; இருவர் காயம்

(மன்னார்)

மன்னார் மாவட்டம் முருங்கன் பாரிய கண்டலில் சிறிலங்கா விமானப்படை குண்டு வீச்சு விமானங்கள் நடாத்திய தாக்குதலில் ஒரு பொதுமகன் பலியானார் மேலும் இருவர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் காலை 8.00 மணியளவில் இப் பகுதிக்குவந்த இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் இப் பகுதியில் ஆறு குண்டுகளை அடுத்தடுத்து வீசின. இக் குண்டு வீச்சு தாக்குதலின் போது ஒரு வீடு சேதமடைந்துள்ளது.

இக் குண்டுவீச்சு தாக்குதலில் போ. பாலூநாத்து (வயது 50) என்பவரே கொல்லப்பட்டவர் ஆவார்.

# வரி விளம்பரம்

## உங்களை அழைக்கின்றது

யோ. எகட்டனின் ஜெசித்தாரா உணவகம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை. மதியஉணவுப்பார்சல்கள் பகல் 11-30 மணி முதல் பெற்றுக் கொள்ளலாம். எங்களுக்குமுன் கூட்டியே அறிவித்தால் நேரடியாக அனுப்பி வைக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு: முகாமையாளர் ஜெசித்தாரா சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை. (சி-6357)

## சேவை

றெனி மூக்குக்கண்ணாடியகம் உங்கள் கண்களை பரிசோதித்து கண்ணாடி சரியாகவழங்கப்படும். இல. 288, நாவலர் வீதி, ஆனைப்பந்தி (யாழ் தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) யாழ்ப்பாணம். (சி/6356)

## ஜெசித்தாரா உணவகம்

நீங்கள் சுவையான உணவை எங்கும் உண்ணலாம். நாங்கள் உங்கள் உணவு வகைகளுக்கு மேலும் சுவையூட்டுகின்றோம். வந்து பரீட்சித்துப் பாருங்கள். ஜெசித்தாரா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி. (சி/ 6358)

## சங்கீதம் வினா-விடை

O/L பரீட்சைக்கும், வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைகளுக்கும் பயன்படும் சங்கீத வினாவிடை விற்பனையாகிறது. ஆக்கம்: "அநேகா" ஸ்ரீசுப்பிரமணியபுத்தகசாலை, யாழ்ப்பாணம். (4700)

## ஸ்ரீரமண பகவான் 44வது சமாதிப்பூசை

பகவான் ஸ்ரீரமண மகரிஷிகளின் 44-வது மகாசமாதிக்குருபூசைத்தினம் இன்று பிற்பகல் 3மணியளவில், உடுவில் கிழக்கு கடவுள் சுவாமிகள் சந்நிதியில் தத்துவஞானாசிரியர் திரு த சத்தியதாஸன் தலைமையில் நடைபெறும். (4714)

## ஜாம் வெற்றுப் போத்தல்கள் தேவை

ஜாம் வெற்றுப் போத்தல் ஒன்று பத்து ரூபாய்படி பெற்றுக் கொள்ளப்படும் வேலவன் ஸ்ரோர்ஸ் நல்லூர் கோயில் முன்பாக. (4710)

## இடமாற்றம்

91/1, மின்சார நிலைய வீதியில் இயங்கி வந்த 'மோர்வின்ஸ்' என்ற றபர்சீல், பிளாஸ்ரிக் வேலைகள் செய்யும் எமது ஸ்தாபனம் தற்போது அதே வீதியில் மலாயன் கபேக்கு முன்னால் இயங்கி வருகிறது என்பதை அறியத் தருகிறோம். (4718)

## சிறுவர் பராமரிப்பு நிலையம்

நவாலி களைஓடை கண்ணகை அம்மன் கோவிலுக்கு அருகாமையில் நவாலி முகாமைச்சேர்ந்த தீவகச் சிறுவர்களுக்கென 'சிறுவர் பராமரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருவதாக விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் தீவகக் கோட்டத்தினரின் குறிப்பொன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (22)

## கிளை ஆரம்பம்

எமது அன்பு நிறைந்த வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க எமது சேவையை எம்மக்களுக்கு விரிவு படுத்தும் நோக்குடனும் அதன் முதற் கட்டமாக

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா**

தனது சேவையை கந்தர்மடம். அரசடிவீதி அங்கர் பார்மஸியில் விற்பனைப் பிரிவை

**18-4-1993**

இன்றுபகல் 12-00 மணிக்கு ஆரம்பிக்கின்றது.

எமது சுவைமிகு தரமான உணவுப் பார்சல்களை பகல் 11-30 மணிமுதல் வழங்குகின்றது.

பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும்கந்தர்மடம், திருநெல்வேலி இந்துக் கல்லூரி மற்றும் அதைச் சார்ந்துள்ள பிரதேச மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம்.

| | | |
|---|---|---|
| மீன் | - | 29-50 |
| இறைச்சி | - | 29-50 |
| மரக்கறி | - | 24-50 |

அத்துடன் எவ்வகையான ஓடர்களையும் ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை. சுண்டுக்குளி.

(சி-6446)

## தவறி வீழ்ந்து மரணம்

முகம் கழுவுவதற்கு கிணற்றில் தண்ணீர் அள்ளிய சிறுவன் கிணற்றினுள் தவறி வீழ்ந்து மரணமானார்.

இச்சம்பவம் வதிரி ஆலங்கட்டை வீதியில் இடம்பெற்றது இறந்த சிறுவனுக்குவயது 13 என்றும் தெரியவருகிறது.

## மலர்ந்த சித்திரைப் புத்தாண்டில் அனைவருக்கும்

**எம் இனிய நல் வாழ்த்துக்கள்**

வாங்கிடுவோம் பனை வெல்லம் – வளர்ந்திடுவோம் சுயசார்பில்!

தரமான, சுத்தமான, தித்திக்கும் வெல்லங்களை வாங்க

**நாடுங்கள்!**

# பனை வெல்லம்

சகல தெங்கு ப. பொ. உ. வி. கூ. சங்கத் தலைமை அலுவலகங்கள்,
சகல தெங்கு ப. பொ. கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணித் தலைமை அலுவலகங்கள்,
மத்திய சந்தைப்படுத்தல் பிரிவுக் களஞ்சியத்திலும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| மொத்த விலை | 1 கிலோ ரூ. | 38.00 |
| சில்லறை விலை | 1 கிலோ ரூ. | 40.00 |

## உணவு பரிமாறும் சேவை

எவ்வகையான வைபவங்களானாலும் உங்கள் மேலைத்தேய, கீழைத்தேய உணவு வகைகள், சிற்றுண்டிகளுக்கு வைபவம் நடைபெறும் இடத்தில் பரிமாறும் சேவையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:
முகாமையாளர்

ஜெசித்தாரா
சுண்டுக்குளி மகளிர்
கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

(சி-6366)

யாழ். நகரில்...

இரு தசாப்தங்களுக்கு மேலாக இணையற்ற சேவையில் உயர்ந்து விளங்கும் கல்வி நிறுவனத்தில்

## 0/L DAY CLASS பகல்நேர வகுப்பு

★ முதற் பிரிவு ஆரம்பமாகி ஒரு வாரத்தினுள் அடுத்த புதிய பிரிவு
(அதே இணையற்ற ஆசிரியர் குழு)

★ இவ் இரண்டாவது பிரிவிற்குமேல் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படமாட்டாது.

19 ஆம் திகதிக்கு முன் பெயர்களைப் பதியுங்கள்

(சி-6442)

ESTD:-1973 REGD:- № J/7993

**The Express Institute**

IRUPALAI - KOPAY

## வீரத்தாய்



**S.S.R. அரிசி ஆலை**

உரிமையாளர்: **சி. தர்மலிங்கம்**

1-ம கட்டை, டச்சு வீதி
சாவகச்சேரி. (4703)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



## சேவை

சகலவிதமான உணவு வகைகளுக்கு ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும். வெளிநாட்டில் பயிற்சி பெற்ற உணவு வல்லுநர்களின் ஆலோசனைக்கேற்ப உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது. ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள். உண்மை புலப்படும்.

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா உணவகம்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

(சி-6439)

## ஜெசித்தாரா உணவகம்

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாராவின் தரமிகு சுவையான உணவுப் பார்சல்கள் பகல் 11-30 மணிமுதல் பிற்பகல் 3-30மணிவரை பெற்றுக்கொள்ளலாம்:

விலை விபரம்:

| | | |
|---|---|---|
| மரக்கறி | - | 24.50 |
| மீன் | - | 28.50 |
| இறைச்சி | - | 29.50 |

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை
சுண்டுக்குளி.

(சி/6367)

## 6-ம் மாத நினைவஞ்சலி



வீரப்பிறப்பு
27-10-1971

வீரச்சாவு
18-09-1992

**2-ம் லெப். தேவானந்தி**

(தேவராணி சிவசுப்பிரமணியம்)

மல்லாகம்

அனைத்து போராளிகளையும் இத்தினத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

''முத்து மாளிகை''
மட்டுவில் மத்தி,
சாவகச்சேரி.
(3392)

தாய்,
சகோதரர்.

மலர்ந்த சித்திரைப் புத்தாண்டில் அனைவருக்கும்

**எம் இனிய நல் வாழ்த்துக்கள்**

வாங்கிடுவோம் பனை வெல்லம் – வளர்ந்திடுவோம் சுயசார்பில்!

தரமான, சுத்தமான, தித்திக்கும் வெல்லங்களை வாங்க

**நாடுங்கள்!**

# பனை வெல்லம்

சகல தெங்கு ப. பொ. உ. வி. கூ. சங்கத் தலைமை அலுவலகங்கள்,
சகல தெங்கு ப. பொ. கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணித் தலைமை அலுவலகங்கள்,
மத்திய சந்தைப்படுத்தல் பிரிவுக் களஞ்சியத்திலும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| மொத்த விலை | 1 கிலோ | ரூ. | 38.00 |
| சில்லறை விலை | 1 கிலோ | ரூ. | 40.00 |

## வெல்லம்
## சில்லறை விற்பனவு நிலையங்கள்

| | | |
|---|---|---|
| 01. | வலிகாமம் கொத்தணி: | வலி. கொத்தணி விற்பனவு நிலையம் / வலி. கொத்தணி சித்த ஆயுர்வேத மருந்தகமும், விற்பனை நிலையமும். பிரதான வீதி, சங்கானை. |
| 02. | யாழ். பகுதி கொத்தணி | சுண்டுக்குளி பல்பொருள் அங்காடி, சுண்டுக்குளி, பாலசிங்கம் விடுதி உணவுச்சாலை, யா / பல்கலைக்கழகம். |
| 03. | சமாசம்: | சந்தைப்படுத்தல் பிரிவு, வட மாகாண தெ. ப. பொ. சமாசம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| 04. | அரியாலை சங்கம்: | அரி கோப், பனம்பொருள் அங்காடி, மாம்பழம்சந்தி, அரியாலை. |
| 05. | யாழ்ப்பாணம்: | பனம்பொருள் விற்பனவு நிலையம், நாவலர் வீதி, நாவாந்துறை. |
| 06. | கோப்பாய்: | கூட்டுறவு அங்காடி, இருபாலைச் சந்தி, இருபாலை. |
| 07. | மானிப்பாய் சங்கம்: | மானி - கோப், வைத்தியசாலை முன்பாக, மானிப்பாய். |
| 08 | கோண்டாவில்: | கற்பகதரு விற்பனை நிலையம் / கற்பக களஞ்சியம், தாவடிச் சந்தி, கோண்டாவில். |
| 09. | சங்கானை: | பனம்பொருள் விற்பனை நிலையம், அராலி வீதி, சங்கானை. |
| 10. | அளவெட்டி / மல்லாகம்: | கற்பகதருவின் விற்பனை நிலையம், ஸ்ரேசன் வீதி, சுன்னாகம். |
| 11. | சாவகச்சேரி சங்கம்: | பொற்பதி விற்பனை நிலையம். இல. 2, பஸ் நிலையம் சாவகச்சேரி |
| 12. | கொடிகாமம்: | சேவை நிலையம், கச்சாய் வீதி. கொடிகாமம். |
| 13. | பளை: | பனம்பொருள் விற்பனவு நிலையம், பஸ்நிலையம், பளை. |
| 14. | அச்சுவேலி: | கற்பகம் மொத்த விற்பனை நிலையம் அச்சுவேலி. |
| 15. | கட்டைவேலி: | பனையகம். கொடிகாமம் வீதி, நெல்லியடி. |
| 16. | பருத்தித்துறை | மொத்த விற்பனவு நிலையம் பரு. தெ. ப. பொ. கூ. சங்கம், மந்திகை. |

விளம்பர அமைப்பு:

வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி.

வட்டு. தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை.
பண்டத்தரிப்பு பரிஷ் தெ. ப. பொ. உ. வி. கூட்டுறவுச் சங்கம். பண்டத்தரிப்பு.
கோண்டாவில் பனை தென்னை வள அபிவீருத்திக் கூட்டுறவுச் சங்கம்.
மானிப்பாய் பரிஷ் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய்.
தெல்லிப்பழை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்.
சுன். / அள. / மல்லாகம் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்.

(சி-6449)

---



**S.S.R. அரிசி ஆலை**

உரிமையாளர்: **சி. தர்மலிங்கம்**

1-ம் கட்டை, டச்சு வீதி

சாவகச்சேரி. (4703)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**தம்பையா தம்பிநாதன்**

[சின்னமணி]

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 15-03-1938 | 19-03-1993 |

மானிடத்தைப் புரிந்து
மகத்தான சேவை செய்தாய்
தமிழ் தாய்க்குத் தொண்டு செய்து
தளராது பாடுபட்டாய்
நல் நண்பர்களின் நெஞ்சங்களில்
நிலையான இடம்பிடித்தாய்
எங்கள் குலவிளக்காய் வாழ்ந்து
வையகத்துள் வாழவழி கூறிய
எங்கள் அன்பு சின்னமணி ஐயா!
உங்கள் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்.

ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை. –அன்பாய்பழகிய நண்பர்கள்

(4709)

---



வீரச்சாவு

18-09-1992

**2-ம் லெப். தேவானந்தி**

(தேவராணி சிவசுப்பிரமணியம்)

மல்லாகம்

அனைத்து போராளிகளையும் இத்தினத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

''முத்து மாளிகை''
மட்டுவில் மத்தி,
சாவகச்சேரி.

தாய்,
சகோதரர்.

(3392)

---

## நினைவு கூருகின்றோம்...

## 1993-04-18

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் கல்குடாவில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது தனது கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய -
ராஜன் [ — பேத்தாழை, வாழைச்சேனை - மட்டு.]

1988 ஆம் ஆண்டு தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -
★ மதி [செல்லத்துரை மதியழகன் - பாலமுனை]

1991 ஆம் ஆண்டு கப்பல்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -
கப்டன் ரகுபதி [நல்லதம்பி தவசீலன் - 515, 2-ம் படிவம், கந்தளாய் - திருமலை]
லஷ்மன் [வேலாயுதம் சந்திரலிங்கம் - கரடிப்புலம், சீனன்குடா - திருமலை]

மன்னார் - பரப்புக்கடந்தான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -
றொக்கி [வரதலிங்கம் செல்வகுமார் - சிவன்வீதி, ஆவரங்கால் மத்தி - யாழ்.]

வவுனியாவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப் பிரிந்த -
மஞ்சலன் [சண்முகவேல் சத்தியசீலன் - ஒலிவர் தோட்டம் - நுவரெலியா]

1992 ஆம் ஆண்டு மன்னார் - தள்ளாடி முகாமிலிருந்து வங்காலைப் பகுதியில் வீதிகளைத் துப்புரவு செய்யவென வெளியேறிய சிறிலங்கா இராணுவ அணி மீது மேற்கொள்ளப்பட்ட திடீர் தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -
கப்டன் காசிம்/தர்மா [சவுரி இரத்தினபாலா - பனங்கட்டிக்கொட்டு - மன்னார்]
லெப். நரேன் [சந்தியோகு விக்ரர்டலிமா - சிறுக்குளம், பரப்பாங்கண்டல், உயிலங்குளம் - மன்னார்]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/6447]

### சிந்தனைக்கு

வாழ்வில், ஒரே ஒரு தோல்விதான் உள்ளது. தான் அறிந்தவற்றில் சிறந்ததற்கு, உண்மையாய் இராததுதான் அது.

— ஃப்ரெடரிக் வில்லியம் ஃபாரார்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 18-04-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05

## தமிழக மக்களையும் காட்டிக் கொடுத்தனர்

மத்தியிலுள்ள அரசாங்கத்துடன் முரண்பாடுகள் வலுவடையும் போதெல்லாம் தமிழகத்திலுள்ள அரசியல்வாதிகள் கையில் எடுத்துக் கொள்வது இந்தி எதிர்ப்புப் போராட்டமும், பிராமண எதிர்ப்புக் கோசங்களும், கச்சதீவை மீளப்பெற வேண்டும் என்ற கோரிக்கையுமே ஆகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு. மக்களை உணர்ச்சி பூர்வமான அரசியலில் இறக்கிவிடுதலே இவர்களின் கடந்தகால வரலாறாகும்.

இந்தவகையில், தற்பொழுது மத்திய அரசுடன் முறுகல் நிலையில் உள்ள தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கச்சதீவை மீளப்பெறுவதற்குத் தமிழக காங்கிரஸ் கட்சி தம்முடன் ஒருங்கிணைந்து போராட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார். செல்வி ஜெயலலிதா விடுத்துள்ள இக்கோரிக்கையானது - அதாவது காங்கிரஸ் ஒருங்கிணைந்து போராட முன்வரவேண்டும் என்பது- தற்பொழுதுள்ள தமிழக அரசியல் சூழ்நிலையில் ஆச்சரியம் அளிக்கக் கூடிய ஒன்றாக இருக்கும் அதேவேளை, அவர் இன்றைய இந்தியா-சிறிலங்கா அரசியல் உறவுநிலை பற்றித் தெளிவாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதையே காட்டுவதாகவும் உள்ளது.

சிறிலங்கா - இந்திய உறவானது என்றுமில்லாதவாறு தற்பொழுது நல்ல நிலையில் உள்ளது. எண்பதுகளில்இந்தியா-சிறிலங்கா உறவில் இருந்த பதற்ற நிலையானது தொண்ணூறுகளில் முற்றாக மாறியுள்ளது. இந்தியா - சிறிலங்கா பொருளாதார உறவும் எதிர்பாராத அளவில் நெருக்கமும் அடைந்துள்ளது.

இதனைத் தெளிவாக புரிந்து கொள்ளாது, இந்திய அரசானது, சிறிலங்கா அரசுடன் இணைந்து இலங்கைத் தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக எடுத்துள்ள நடவடிக்கையை ஏதோ விடுதலைப் புலிகள் ராஜீவ்காந்தியைக் கொன்றார்கள் என்ற குற்றச்சாட்டிற்காக எடுக்கப்பட்டது என தமிழக அரசியல்வாதிகள் எண்ணிக்கொண்டிருப்பார்களேயானால் அது அவர்களின் அரசியல் அறியாமையைக் காட்டுவதாகவே அமையும்.

இலங்கைத் தமிழர் நடத்தும் தேசிய இன விடுதலைப் போராட்டமானது, வெற்றிகரமான பாதையில் முன்னெடுக்கப்படுமானால், தமிழகத்தில் உரு

# அந்நியனின் அதர்மத்தை எதிர்த்து அறப்போர் தொடுத்த அன்னை

(நேற்றைய தொடர்ச்சி)

இந்தியாவுக்கு எதிரான பிரசாரம் உலகளாவிய ரீதியில் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது. இவ்வேளையில் தான் இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தியின் அகில இந்திய வானொலி அறிவிப்பு வெளியாகின்றது.

''இந்திய அமைதிப்படை இலங்கைத் தமிழ் மக்களுக்கெதிராகப் போராடவில்லை. விடுதலைப் புலிகளுக்கு கெதிராகப் போராடுகின்றது.''

அன்னையர் முன்னணியினரின் அகிம்சைப்போர் மக்கள் போர்ாட்டமாக மாறி அது பாரத அரசுக்கு எதிராகஉலக பத்திரிகைபாளர்கள் மூலம் ஏற்படுத்திய தாக்கத்தை மூடி மறைக்கவே இவ்வறிவிப்பு ராஜீவ் காந்தியினால் விடுவிக்கப்பட்டது.

அத்தோடு ''அன்புவழி'' ''வெற்றிமாலை'' 'நேசக்கரங்கள்'' நிகழ்வுகளை தனது இராட்சத பிரசார சாதனங்கள் மூலம் ஒலிபரப்பிய இந்திய அரசு தமிழ் மக்களுக்கெதிரான இந்திய இராணுவத்தின் படுகொலைகளை மூடி மறைக்க முயன்றது.

அனைத்துலக ரீதியாக இந்திய அரசுக்கெதிராக ஏற்பட்டுள்ள அபகீர்த்திகளை அடக்கிவிட இந்திய உயர் அதிகாரிகள் முடிவெடுத்தனர்.

### அன்னையருடன் நடத்திய பேச்சுக்கள்

ஜனவரி 7-ம்திகதி திருமலையில் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு அன்னையர் முன்னணியின் நிர்வாகக்குழுவுக்கு அழைப்பு வந்தது. இப்பேச்சுவார்த்தையில் இந்திய அரச தரப்பில் இராணுவ உயர் அதிகாரி பிரிகேடியர் சன்டேஸ் கலந்து கொள்கின்றார்.

''புலிகள் ஆயுதங்களை கையளிக்க வேண்டும் அதன் பின்னர் பேச்சுவார்த்தைநடாத்தச் சம்மதம் தெரிவிக்க வேண்டும்'' என அன்னையர் முன்னணியிடம் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. அன்னையர்கள் தாம் கொண்ட நிலைப்பாட்டில் உண்ணாவிரதப்போர் தொடர்கின்றது.

பெப்ரவரி 10ஆம் நாள்,

மீண்டும் பேச்சுவார்த்தை

அன்னையர் முன்னணியின் நிர்வாகக்குழு கொழும்பிற்கு அழைக்கப்படுகின்றது. இந்திய தூதுவர் டிக்சிட் பேச்சுவார்த்தை நடாத்துகின்றார். மீண்டும் அதே வேண்டுகோள். ' புலிகள் ஆயுதங்களைக் கையளித்து பேச்சு வார்த்தைக்கு முன் வரவேண்டும். நாம் அவர்களுக்கு எல்லாவித உதவிகளும் செய்யத் தயாராகவிருக்கின்றோம். இதை அன்னையர் முன்னணியினர் புலிகளிடம் வற்புறுத்திக் கேட்க வேண்டும்'' என்று மிரட்டலுடனான வேண்டுகோள் விடுக்கின்றார் டிக்சிட். டிக்சிட்டின் வேண்டுகோளைக் கேட்ட

## தென் தமிழீழத்தில் அன்னையரின் எழுச்சி

அன்னையர்கள் உள்ளம் குமுறுகின்றனர். உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளமுடியாது ''புலிகள் எங்கள் பாதுகாவலர்கள்'' நீங்கள்தான் யுத்த நிறுத்தத்திற்கு அறிவிக்க வேண்டும் என ஓரளவு மிரட்டலுடன் பேசுகிறார். இதை அவமரியாதையாகக் கருதிய டிக்சிட்டின் முகம் சுருங்கிப்போகின்றது. ''பெண் என்டபதால் பேசாமல் செல்கின்றேன்'' என ஆங்கிலத்தில் கூறிவிட்டு எழுந்து செல்கின்றார் டிக்சிட்.

### இராணுவத்தால் அன்னையர் சுற்றிவளைப்பு

மாமாங்க ஆலயம் மக்கள் வெள்ளத்தால் நிறைந்து காணப்படுகின்றது. கொழும்புக்குப் பேச்சுவார்த்தைக்குச் சென்றுள்ளார்கள் ஏதாவது ஒரு முடிவோடுதான் வருவார்கள் எனும் எதிர்பார்ப்போடு மக்கள் காத்து நிற்கின்றனர்.

டிக்சிட்டின் பேச்சுவார்த்தை முறிந்துபோன செய்தி மட்டக்களப்பிற்கு அறிவிக்கப்பட்ட

கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

12,13,14 ஆம் நாட்கள், ஊரடங்குச்சட்டம் தொடர்ச்சியாகப்பிறப்பிக்கப்படுகிறது. மக்கள் எவருமே வெளியில் நடமாடக்கூடாது என ஒலிபரப்பியில் அறிவிக்கப்படுகின்றது.

உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு இந்திய இராணுவம் மிரட்டல் விடுக்கின்றது. உண்ணாவிரதத்தில் கலந்துகொண்ட பெண்கள், மாணவிகள் என நூற்றுக்கணக்கானோர் இருந்த இடத்தைவிட்டு நகராது ஆலய மணல் வீதியிலேயே அமர்ந்து வீட்டனர். அன்னையரும் சுற்றிவளைக்கப்பட்ட மக்களுமாக மூன்றுநாட்கள் தொடர்ந்து உண்ணாவிரதமிருந்தனர்.

இந்திய இராணுவம் மேற்கொள்ளும் மிரட்டல் நடவடிக்கைகள் எதற்குமே அஞ்சாது அடிபணியாது நின்ற மக்களின் மன உறுதியைக் கண்டு அஞ்சியது பாரத அரசு.

வேறு வழியின்றி ஊரடங்குச்சட்டம் நீக்கப்படுகிறது. இராணுவ சுற்றி வளைப்பு வேலி தளர்த்தப்படுகிறது. உண்ணாநோன்பு தொடர்கிறது. தங்கள் உறுதியான நடவடிக்கைகளினால் ஊரடங்கு உடைத்தெறியப்பட்டதை எண்ணி மனம் மகிழ்ந்தனர்.

15ஆம் நாள்,
அவமானத்தை தாங்கிச் சென்ற பாரதப்படையணி அன்னையர் முன்னணியினரின் ஆலோசர் கிங்ஸ்லி இராசநாயகத்தின்வீட்டைச்சுற்றிவளைக்கின்றது.

ஆலோசகர் கைது செய்யப்படுகின்றார். அவ்விடத்திலேயே அவர் நையப்புடைக்கப்பட்டு பின்னர் முகாமிற்கு ஏற்றிச் செல்லப்படுகின்றார். அன்னையர் முன்னணியினரின் செயல்பாடுகளுக்கு எதிராக இந்திய ஆக்கிரமிப்பு

மக்களின் மகோன்னத ஆதரவோடு தங்கள் உறுதியின் வலுவை உலகுக்கு உணர்த்துவதற்கு முடிவெடுத்தனர்.

### சாகும்வரை உண்ணா விரதம்

திலீபன் காட்டிய போராட்டப்பாதை சாகும் வரை உண்ணாவிரதம் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து உண்ணாவிரதம் ஆரம்பித்தான் திலீபன்.

புலிகளுக்கு ஆதரவாக இரண்டு அம்சக்கோரிக்கையை முன்வைத்தனர் அன்னையர்கள்.

திலீபன் விரும்பிய மக்கள் புரட்சி தென்தமிழீழத்திலே அன்னையர் எழுச்சியாக வெடித்தது.

சுழற்சி முறைத்தொடர் உண்ணாவிரதத்தை சாகும் வரை உண்ணா விரதமாக கடைப்பிடிப்பதென அன்னையர் முடிவெடுத்தனர்.

''நான் தான் முதலில் உண்ணா விரதம் இருக்கப் போகின்றேன்'' என அன்னை பூபதி தனக்கே உரிய இயல்பான உணர்ச்சி வேகத்தோடு முன்வந்தார்.

சி. கரிகாலன்
துணைப் பொறுப்பாளர்,
அரசியல்துறை.

''இல்லை நான் இருக்கப் போகின்றேன்'' என வாதிட்டார் அன்னம்மா டேவிட்.

மக்களின் விடிவுக்காக ஆயுதபாணிகளாக வெடிகுண்டுகளைத் தங்கள் உடலோடு தாங்கிச் சென்று தங்கள் இன்னுயிரைத் தற்கொடைசெய்யும் கரும்புலிகளும், ஆயுதங்களற்ற நிலையிலும்,

''மக்களுக்காக நான் மரணிக்கத் தயார்'' என நிரூபித்த திலீபனும் புலிகளின் போராட்டப்பாதையின் மைல்கற்கள்.மக்களும் புலிகள் தான் என்பதை நிரூபிக்கத் தங்கள் உயிரைத் தற்கொடை செய்ய அன்னையர்கள் போட்டி

16ஆம் நாள் 2ஆம் மாதம் 87 ஆம் ஆண்டு,

மாமாங்க ஆலய முன்றலில் அன்னம்மா டேவிட் சாகும் வரை உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கிறாள். அன்னையர்களின் மனஉறுதிமிக்க போராட்ட உணர்வின் இறுக்கம் அதிகரித்துச் செல்வதைத் தடுக்கத் திட்டங்கள் தீட்டியது இந்தியப்படை.

சாகும்வரை உண்ணாவிரதம் அறிவிக்கப்பட்டதும் தென் தமிழீழம் முழுவதும் திரண்டனர் அன்னையர்கள் கிராமம் கிராமமாக ஆதரவு உண்ணாவிரதப் போர் ஆரம்பித்தது.அணி அணியாக ஆதரவு ஊர்வலங்கள் நடந்தன. இந்திய அமைதிப்படை பெண்களுக்கு இழைத்துவந்த கொடுமைகளைத் தடுக்க முக்காட்டுக்குள் முகம் புதைத்தது. மூலைக்குள் முடங்கிக் கிடந்த முஸ்லிம் பெண்கள் வீதியில் திரண்டனர். மாமாங்க ஆலயத்தை நோக்கி மாதர் அணி திரண்டது.

மாமாங்க ஆலய முன்றலில் உள்ள இந்தியப்படையின் முகாம், வெள்ளம்போல் திரண்ட பெண்களால் முற்றுகைக்குள்ளாக்கப்படுகிறது. உண்ணாவிரதப்போரை நிறுத்த வேண்டுமென ஆயுதம் தாங்கிய இந்தியப்படை அன்னையரை மிரட்டுகிறது. அன்னம்மா டேவிட் மரணிக்க நேர்ந்தால் உங்கள் மீது கொலைக் குற்றம் சாட்டி வழக்குத் தொடருவோம் என அன்னையர் முன்னணியினரை மிரட்டுகிறார்கள் இந்தியப்படையினர்.

இந்தியப் படையினரின் மிரட்டல்களுக்குப் பணியாது அன்னம்மா டேவிட்டின் உண்ணாவிரதம் தொடர்கிறது.

இந்த உண்ணாவிரதத்தை முறியடிப்பதற்கு பகீரத முயற்சிகளை மேற்கொள்கிறது இந்திய இராணுவம். அன்னம்மாவின் பிள்ளைகளை கைது செய்து, அவர்களுக்கு ஆசை வார்த்தை கூறி. அவர்களிடமிருந்து ஒரு கடிதத்தை எழுதி வாங்குகிறார்கள் இந்தியஇராணுவ அதிகாரிகள்.அந்தக் கடிதத்தில், அன்னம்மா டேவிட் பலவந்தமாக உண்ணாவிரதத்தில் ஈடுபடுத்தப்பட்டார் என பிள்ளைகள் கூறுவது போல

சிறிலங்கா - இந்திய உறவானது ... வாறு தற்பொழுது நல்ல நிலையில் உள்ளது. எண்பதுகளில்இந்தியா-சிறிலங்கா உறவில் இருந்த பதற்ற நிலையானது தொண்ணூறுகளில் முற்றாக மாறியுள்ளது. இந்தியா - சிறிலங்கா பொருளாதார உறவும் எதிர்பாராத அளவில் நெருக்கமும் அடைந்துள்ளது.

இதனைத் தெளிவாக புரிந்து கொள்ளாது, இந்திய அரசானது, சிறிலங்கா அரசுடன் இணைந்து இலங்கைத் தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக எடுத்துள்ள நடவடிக்கையை ஏதோ விடுதலைப் புலிகள் ராஜீவ்காந்தியைக் கொன்றார்கள் என்ற குற்றச்சாட்டிற்காக எடுக்கப்பட்டது என தமிழக அரசியல்வாதிகள் எண்ணிக்கொண்டிருப்பார்களேயானால் அது அவர்களின் அரசியல் அறியாமையைக் காட்டுவதாகவே அமையும்.

இலங்கைத் தமிழர் நடத்தும் தேசிய இன விடுதலைப் போராட்டமானது, வெற்றிகரமான பாதையில் முன்னெடுக்கப்படுமானால், தமிழகத்தில் உருவாகும் எந்தப் போராட்டத்திற்கும் அது உந்து சக்தியாகவும், வழி காட்டியாகவும் அமைந்துவிடும் என்பதே மத்தியில் உள்ள காங்கிரஸ் கட்சியின் கணிப்பாகும். இதற்காகவே இலங்கைத் தமிழரின் போராட்டத்தை சிங்களப் பேரினவாதத்துடன் சேர்ந்து நசுக்கிவிட இந்தியாவில் ஆட்சியில் உள்ள காங்கிரஸ் அரசு முற்படுகின்றது. ஆகையினால் விடுதலைப் புலிகளுக்கெதிரான இந்திய மத்திய அரசின் நடவடிக்கையானது தனியாக இலங்கைத் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு மட்டுமல்ல தமிழ்நாட்டில் இனிமேல் எழப்போகும் சகல உரிமைப் போராட்டங்களுக்கும் எதிரானது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆனால், இதனைத் தமிழகத்தில் ஆட்சியில் இருந்த / இருக்கின்ற திராவிடக் கட்சித் தலைவர்கள் தமது அரசியல்ஆதாயத்திற்காக மூடிமறைத்துவிட்டனர். தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழகத்தில் ஏதோ ஆயுத கலாசாரத்தை கட்டவிழ்த்துவிடுவதாகக் கூறி இலங்கைத் தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தைத் தோற்கடிப்பதற்கு மத்திய அரசிற்கு துணை புரிந்து வந்தனர்.

ஆனால், தற்பொழுது அரசியல் நிலைபரத்தை சரியாகக் கணிப்பீடு செய்யாது தமது அரசியல் ஆதாயத்தை கருத்தில் கொண்டு கச்சதீவை மீளப் பெற காங்கிரஸ் கட்சி உதவி புரிய வேண்டும் என ஜெயலலிதா கோருகின்றார். இது நடைமுறைச் சாத்தியமற்றதும் காங்கிரஸ்கட்சியின் தற்போதைய வெளியுறவுக் கொள்கைக்கும் முரணானதாகும். இதனைக் காங்கிரஸ் கட்சி ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

இது மட்டுமல்ல, இனிமேல் இதேபோன்ற போராட்டங்களை தமிழக அரசு நடத்துவதற்கு மத்தியில் உள்ள அரசுகள் ஒத்துழைக்கப் போவதுமில்லை. விடுதலைப்புலிகளை ஒடுக்குவதென்ற போர்வையில், இந்திய – இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டங்களை நசுக்குவதற்கு மத்திய அரசிற்கு துணைபோன தமிழக அரசியற் தலைவர்கள் இனிமேல், இலங்கைத் தமிழ் மக்களுக்காக மட்டுமல்ல, தமிழக மக்கள் கூட உரிமைப் போராட்டம் எதையும் நடத்த முடியாத நிலையை உருவாக்கியுள்ளனர் அதாவது, தமது நலனுக்காக இலங்கைத் தமிழரை மட்டுமல்ல தமிழகமக்களையும் இவர்கள் காட்டிக் கொடுத்து விட்டனர் என்பதே நிஜம்.

## அன்னையருடன் நடத்திய பேச்சுக்கள்

ஜனவரி 7-ம்திகதி திருமலையில் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு அன்னையர் முன்னணியின் நிர்வாகக்குழுவுக்கு அழைப்பு வந்தது. இப்பேச்சுவார்த்தையில் இந்திய அரச தரப்பில் இராணுவ உயர் அதிகாரி பிரிகேடியர் சன்டேஸ் கலந்து கொள்கின்றார்

''புலிகள் ஆயுதங்களை கையளிக்க வேண்டும் அதன் பின்னர் பேச்சுவார்த்தைநடாத்தச் சம்மதம் தெரிவிக்க வேண்டும்'' என அன்னையர் முன்னணியிடம் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. அன்னையர்கள் தாம் கொண்ட நிலைப்பாட்டில் இருந்து அசையவில்லை தமது கோரிக்கைகளை இந்திய அரசு ஏற்க வேண்டுமென வற்புறுத்தினர். பேச்சுவார்த்தையின் முடிவுகள் டெல்லிக்கு அனுப்பப்பட்டு பதில் தரப்படும் என அறிவிக்கப்படுகின்றது. முடிவுகள் எதுவுமேகிடைக்கவில்லை.

சுருங்கிப்போகின்றது. ''பெண் என்பதால் பேசாமல் செல்கின்றேன்'' என ஆங்கிலத்தில் கூறிவிட்டு எழுந்து செல்கின்றார் டிக்சிட்.

## இராணுவத்தால் அன்னையர் சுற்றிவளைப்பு

மாமாங்க ஆலயம் மக்கள் வெள்ளத்தால் நிறைந்து காணப்படுகின்றது. கொழும்புக்குப் பேச்சுவார்த்தைக்குச் சென்றுள்ளார்கள் ஏதாவது ஒரு முடிவோடுதான் வருவார்கள் எனும் எதிர்பார்ப்போடு மக்கள் காத்து நிற்கின்றனர்.

டிக்சிட்டின் பேச்சுவார்த்தை முறிந்துபோன செய்தி மட்டக்களப்பிற்கு அறிவிக்கப்பட்டதும் இந்திய இராணுவ கனரக வாகனங்கள் பேரிரைச்சலோடு மாமாங்க ஆலயத்தை மக்களோடு சேர்த்து சுற்றிவளைத்துக் கொள்கின்றது. அப்பகுதியில் தற்காலிக இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்படுகிறது. கூடி நின்ற மக்கள் இடத்தை விட்டு அசையாது ... றது. தங்கள் உறுதியான நடவடிக்கைகளினால் ஊரடங்கு உடைத்தெறியப்பட்டதை எண்ணி மனம் மகிழ்ந்தனர்.

15ஆம் நாள்,

அவமானத்தை தாங்கிச் சென்ற பாரதப்படையணி அன்னையர் முன்னணியினரின் ஆலோசர் கிங்ஸ்லி இராசநாயகத்தின்வீட்டைச்சுற்றிவளைக்கின்றது.

ஆலோசகர் கைது செய்யப்படுகின்றார். அவ்விடத்திலேயே அவர் நையப்புடைக்கப்பட்டு பின்னர் முகாமிற்கு ஏற்றிச் செல்லப்படுகின்றார்.

அன்னையர் முன்னணியினரின் செயல்பாடுகளுக்கு எதிராக இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அழுத்தங்கள் அதிகரிக்கப்பட்டன.

அன்னையர் முன்னணி அமைப்பில் மன உறுதியை உடைப்பதற்குப் பலவிதமான தந்திரோபாயங்கள் கையாளப்படுகின்றன. ஆனாலும் அன்னையர்கள் அசையவில்லை.

''இல்லை நான் இருக்கப் போகின்றேன்'' என வாதிட்டார் அன்னம்மா டேவிட்.

மக்களின் விடிவுக்காக ஆயுத பாணிகளாக வெடிகுண்டுகளைத் தங்கள் உடலோடு தாங்கிச் சென்று தங்கள் இன்னுயிரைத் தற்கொடைசெய்யும் கரும்புலிகளும், ஆயுதங்களற்ற நிலையிலும்,

''மக்களுக்காக நான் மரணிக்கத் தயார்'' என நிரூபித்த திலீபனும் புலிகளின் போராட்டப்பாதையின் மைல்கற்கள். மக்களும் புலிகள் தான் என்பதை நிரூபிக்கத் தங்கள் உயிரைத் தற்கொடை செய்ய அன்னையர்கள் போட்டி போடுவதைப்பார்த்து இந்திய வல்லாதிக்கத்தின் புருவங்கள் உயர்ந்தன.

அன்னையர் முன்னணியினரின் போட்டியைத்தீர்ப்பதற்கு அதிர்ஷ்டச்சீட்டுகுலுக்கப்படுகிறது. அன்னம்மா டேவிட்தேர்ந்தெடுக்கப்படுகிறாள்.

... கிறார்கள் இந்தியப்படையினர்.

இந்தியப் படையினரின் மிரட்டல்களுக்குப் பணியாது அன்னம்மா டேவிட்டின் உண்ணாவிரதம் தொடர்கிறது.

இந்த உண்ணாவிரதத்தை முறியடிப்பதற்கு பகீரத முயற்சிகளை மேற்கொள்கிறது இந்திய இராணுவம். அன்னம்மாவின் பிள்ளைகளை கைது செய்து, அவர்களுக்கு ஆசை வார்த்தை கூறி. அவர்களிடமிருந்து ஒரு கடிதத்தை எழுதி வாங்குகிறார்கள் இந்தியஇராணுவ அதிகாரிகள். அந்தக் கடிதத்தில், அன்னம்மா டேவிட் பலவந்தமாக உண்ணாவிரதத்தில் ஈடுபடுத்தப்பட்டார் என பிள்ளைகள் கூறுவது போல எழுதப்பட்டது.

அந்தக் கடிதத்தை ஆதாரமாகக்காட்டி உண்ணாவிரதமிருந்த அன்னம்மா டேவிட்டை பலவந்தமாக தூக்கிச் செல்கிறது இந்திய இராணுவம்.

(தொடரும்)

# இரண்டு ஆண்டுகளாக புலிகள் நடமாட்டம்

### கருணாநிதி தெரிவிப்பு

தமிழ் நாட்டில் கடந்த இரண்டு ஆண்டுகாலமாக விடுதலைப்புலிகளின் நடமாட்டம், தொடர்ந்து இருப்பதாக தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.

கடந்த வியாழன் தூத்துக்குடியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், தமிழகத்தின் பல்வேறு இடங்களில், விடுதலைப் புலிகள் சிறைகளிலிருந்து தப்பிச் சென்றதையும், சுட்டிக்காட்டினார்.

அத்துடன் உள்ளூராட்சித் தேர்தல்களைச் சந்திக்க மாநில அரசு தயங்குவதாகவும் குறிப்பிட்டார்.

# அ.இ.அ.தி.மு.க. ஆட்சி ஓர் அரசியல் விபத்து

### தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் ஆட்சி தமிழ்நாட்டில் ஏற்பட்டமை ஓர் அரசியல் விபத்து ஆகும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவ் அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில், அ. இ. அ. தி. மு. க. ஆட்சி ஒரு ஊழல் ஆட்சி என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கச்சதீவை மீளப் பெற காங்கிரஸ் இணையவேண்டும்

### ஜெயலலிதா கோரிக்கை

இலங்கையிடமிருந்து கச்சதீவை மீளப் பெறுவதற்கு மாநிலத்தின் ஆளும்கட்சியான அ. இ. அ. தி. மு. கவுடன் எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சியும் இணைந்து முயற்சி மேற்கொள்ளவேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா சட்டப் பேரவையில் பேசும் போது கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வியாழன் சட்டப் பேரவையில் மின்வளத்துறைக்கான நிதி ஒதுக்கீடு, தொடர்பான விவாதத்தில் குறுக்கிட்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்; கச்சதீவு விவகாரம் மத்திய அரசின் பரிசீலனையில் இருப்பதாகக் கிடைத்த தகவலுக்குப் பின்னர் எந்தத் தகவலும் தமக்குக் கிடைக்கவில்லை என்றும் கூறினார்.

## பொது அறிவுத்

பட்ட இந்தப் பொது அறிவுத் தேர்வில் யாழ். மாவட்டத்திலிருந்து 25,000 மாணவர்களும், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவுஆகிய மாவட்டங்களிலிருந்து 10,000 த்துக்கும் மேற்பட்ட 'மாணவர்களும் தோற்றியிருந்தனர்.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்குத் தேசியரீதியாக முறையே தங்க, வெள்ளி வெண்கலப் பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன. அத்துடன் யாழ். மாவட்டத்தில் 6 கோட்டங்களிலும், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்குச் சிறப்புப் பரிசில்களும் வழங்கப்படவிருக்கின்றன.

யாழ். மாவட்டத்திலுள்ள 6 கோட்டங்களிலும் முதல் மூன்று இடங்களைப்பெற்ற மாணவர்களுக்கும், தேசிய பரிசில்களைப் பெறும் மாணவர்களுக்கும்; 19-4-93 அன்று காலை 10 மணிக்கு உரும்பராயில் அமைந்துள்ள அன்னை பூபதி கலையரங்கில் வைத்து பரிசில்கள் வழங்கப்பட இருக்கின்றன.

அனைத்துப் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்களையும் மாணவர்கள் பெற்றோர்களையும் விழாவுக்கு வருகை புரியுமாறு விடுதலைப் புலிகள் மாணவர்அமைப்பினர் அழைக்கின்றனர்.

க. பொ. த. (சா/த) பரீட்சையில்

# வடக்கு கிழக்கு பகுதியின் மாணவர்களே முன்னணியில்

[கொழும்பு]

அண்மையில் வெளியிடப்பட்ட க. பொ. த. சாதாரண தரப்பரீட்சை முடிவுகளின்படி வடக்கு கிழக்கு பகுதி மாணவர்களே அதிகமாக சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளதாக பரீட்சை ஆணையாளர் அலுவலக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் மற்றைய பகுதிகளில் மாணவர்களைவிட மாணவிகளே சிறந்த பெறுபேறுகளை அதிகமாக பெற்றுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

# மனையியல், விவசாய ஆசிரியர்கள் பற்றாக்குறை

[கொழும்பு]

தமிழ் பாடசாலைகளில் மனையியல், விவசாயம் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாக இ. த. ஆ. சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் கல்விச் சேவைச் சபையின் செயலாளருக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரச தொழில்நுட்பக் கல்லூரிகளில் மனையியல் டிப்புளோமா தமிழ் மொழி மூலம் வழங்கப்படுவதில்லை. மேலும் குண்டசாலை, அம்பாறை, ஹார்டி கல்வி நிலையம், அக்கியுனாசியும் விவசாய டிப்புளோமா கற்கைநெறி வகுப்புகள் தமிழ் மொழிமூலம் நடத்தப்படுவதில்லை. வவுனியா விவசாயக் கல்லூரியும் மூடப்பட்டுள்ளது. உடற் கல்வியிலும் இதே நிலைதான்.

இக் கற்கை நெறிகள் தமிழ் மொழி மூலம் நடாத்தப்படாவிட்டால், தமிழ் பாடசாலைகளில் இப் பாட நெறிகளுக்கான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப முடியாது என்றும், தமிழ் மொழி மூலம் விவசாயம், மனையியல் டிப்ளோமா வகுப்புகளை நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் அந்த மகஜரில் மேலும் கோரப்பட்டுள்ளது.

## மதுரகவி நினைவு விழா

பாஷையூர் மதுரகவி நீ. மிக்கோர்சிங்கம் நினைவு விழா வரும் வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. பாஷையூர் நாட்டுக்கூத்து வளர்ச்சிக் கழகம் நடாத்தும் இவ் விழா மு. சிங்கராயர் தலைமையில் நடைபெறும்.

ஈழநாதம்

## இன்று திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

வேலணை ப நோ.கூ. சங்கம் இடம் பெயர்ந்தவர்களுக்கான பங்குனி மாத இறுதி இரு வாரங்களுக்குரிய உலர் உணவு ஞாயிற்றுக்கிழமை இன்று சகல கிளைகளும் முழுநேரம் திறந்து விநியோகிக்கப்படும்

## அன்னை

நாளை மாலை 7.00 மணியளவில் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் அஞ்சலிக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. இன்றும் இம் மைதானத்தில் அஞ்சலிக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இன்று நல்லூர் திருநெல்வேலி தலங்காவில் பிள்ளையார்கோவில், யாழ். முலவைச் சந்தி, சுதுமலை அம்மன் ஆலயம், உடுவில் மயிலன் முருகமூர்த்தி கோவிலடி, சங்கானை பஸ்நிலையம், நாவற்குழி சிறிமுருகன் சனசமூகநிலையம், பொன்னம்மான் குடியேற்றத் திட்டம், கிளாலித்தோட்டம் பிள்ளையார் ஆலயம், பருத்தித்துறை ஆத்திசூடிபிள்ளையார்கோவில், யாழ். இந்துக் கல்லூரி ஆகிய இடங்களிலும் இன்று அடையாள உண்ணா விரதம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

## மாகாணசபை

இடையில் உயிர் தப்பினார் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இம் முறையும் வன்முறைகள் உச்சநிலையிலேயே மாகாணசபை தேர்தல் நடைபெறும் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## ஒரு பரீட்சார்த்திக்கு

சார்த்திகள் எந்த பரீட்சை நிலையத்தில் தோற்றுவது என அங்கலாய்க்கின்றனர்.

இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் நேற்று யாழ். கல்வித் திணைக்களத்தில் முறையீடு செய்துள்ளனர். மேலும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் சிலரின் அனுமதி அட்டைகளும் கிடைக்கப்பெறவில்லை என தெரிவிக்கப்பட்டது. (பா)

## லொஸ்

விருக்கிறது. இவர்களுக்கான தண்டனை பற்றி ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று தெரிய வருகிறது.

## மோட்டார்

துள்ளனர். 21 - 4 - 93 முதல் ஆரம்பிக்கப்படவுள்ள இந் நடைமுறையில் முதற் கட்டமாக யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட மோட்டார் ஊர்தி உரிமையாளர்களிற்கான பதிவு மேற்கொள்ளப்படவுள்ளது. மேலதிக விபரங்களுக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள மோட்டார் ஊர்தி பதிவுச் செயலகத்தில் (முன்னைய வடபகுதிக்கு வெளியே செல்வோருக்கான அனுமதி வழங்கும் செயலகம்) தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.


## ஸ்ரீதர் திரையரங்கில்

# 100 RIFLES

(100 துப்பாக்கிகள்)

தமிழ் விளக்கம்

தினசரி மாலை 4 மணி, 6 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30 மாலை 4 மணி, 6 மணி

(சி-6376)


## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 17-04-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9056

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

26-0763, 24-2493, 24-2024, 40-4760, 26-1583, 27-6259, 24-1250, 26-3068, 41-8035, 24-6699, 24-2680, 24-5967, 24-0192, 27-2107.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

இல்லை


யாழோசை மன்ற மேம்பாட்டு நிதிக்காக
யாழோசையினரின்

## செந்தமிழ்பாட்டு இசை நிகழ்ச்சி

★ யாழ் கைலாசபதி அரங்கு ★ 2. 5. 93

நுழைவாயில் சீட்டு பெறுமிடம்:-

யாழ் பூபாலசிங்கம் புத்தகசாலை
சிற்றிபோய்ஸ் ரெயிலேஸ்- கொட்டடி,
''சுப்பஸோ'' - நாவலர் வீதி.

(4695)


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்

## வேலணைப் பிரிவு

16-04-93இல் இழுக்கப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டில் பரிசு பெற்ற சீட்டுக்கள் விபரம்:

1. 0836 2. 3880 3. 0722
4. 0457 5. 2943

பரிசுக்குரியவர்கள் உடனடியாக வேலணைப் பிரிவுப் பணிமனையில் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்துப் பரிசுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளவும்.

செஞ்சிலுவைச் சங்கச் சேவையில்,
கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
17-04-93

(சி-6451)

## 31-ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 13 – 07 – 1924



மறைவு: 20 – 03 – 1993

## துரைராசா - தவமணிதேவி

கல கலத்து கதைகள் பல பேசி சுதந்திரக் காற்றாக சுற்றித் திரிந்த வீடு - இன்று சோகம்
அவனியில் நல்லதோர் தாயாய், இல்லத்தரசியாய், அன்புக்கினிய அத்தையாய் எம்மையெல்லாம் அரவணைத்த பாசமிகு தெய்வமே! ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டுவிட்டீர்களே! ஒரு மாதம் அல்ல ஒரு யுகம் ஆனாலும் உருவமும், நினைவும் எங்கள் மனதை விட்டு நீங்காது நிலைத்திருக்கும் தெய்வமே! விண்ணகத்தில் நிறைந்திருக்கும் நிந்தனது ஆத்மா சாந்திக்காய் நாங்கள் இரு கரமேற்றி இறைவனை இறைஞ்சுகிறோம்.

(அன்னாரின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்தியம் அவரது இல்லத்தில் திங்கள் (19-04-93) இல் நடைபெறும்.)

இங்ஙனம்

198/6 நாவலர் வீதி, உங்கள் பிரிவால் துயருறும்

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணுலகம்: 01 – 04 – 1916



விண்ணுலகம்: 29 – 04 – 1992

## அமரர் திருமதி செல்லம்மா இராஜப்பா

(கொக்குவில் கிழக்கு)

அன்புடனும், பண்புடனும் எம்மை வளர்த்து
ஆருயிராய் அரவணைத்த அன்புத் தெய்வமே,
இனி ''அம்மா'' என்று நாமழைக்க யாருளரோ
''அம்மம்மா'' என்றவுடன் அன்பாக உணவூட்டி
ஆசையுடன் எம்மை அன்பாக வளர்த்தெடுத்து,
இடையினிலே எம்மை திடீரென விட்டு ஏன் பிரிந்தீர்
''அம்மம்மா'' என்று நாமழைத்து ஓராண்டு ஆகிவிட்ட
- தம்மா

எம் உள்ளம் இருக்கும் வரை உங்கள் இனிய நினை
- வலைகள் என்றும் இருக்கும்.

தங்கள் ஆத்மா சாந்தியடைய பகவானைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்

## ஐந்தாம் ஆண்டை நினைவு கொள்வோம்




வீரப்பிறப்பு: 10-01-1939

வீரக்கொடை: 19-04-1988

''அன்னையாம் பூபதியெம் அல்லல்கள் களைந்தெறிய தன்னையே ஈந்தாள்; இந்தத் தரணியில் நாம் அறிவோம்.

தன்னலம்தனைக் களைந்து தமிழர்தம் வாழ்வுயர
... நினைவு கொள்

1924  1993

## துரைராசா - தவமணிதேவி

கல கலத்து கதைகள் பல பேசி சுதந்திரக் காற்றாக சுற்றித் திரிந்த வீடு - இன்று சோகம்

அவனியில் நல்லதோர் தாயாய், இல்லத்தரசியாய், அன்புக்கினிய அத்தையாய் எம்மையெல்லாம் அரவணைத்த பாசமிகு தெய்வமே! ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்டுவிட்டீர்களே! ஒரு மாதம் அல்ல ஒரு யுகம் ஆனாலும் உருவமும், நினைவும் எங்கள் மனதை விட்டு நீங்காது நிலைத்திருக்கும் தெய்வமே! விண்ணகத்தில் நிறைந்திருக்கும் நிந்தனது ஆத்மா சாந்திக்காய் நாங்கள் இரு கரமேற்றி இறைவனை இறைஞ்சுகிறோம்.


(அன்னாரின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்தியம் அவரது இல்லத்தில் திங்கள் (19-04-93) இல் நடைபெறும்.)

இங்ஙனம்

198/6 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும் கணவன், மகன் மருமக்கள், சகோதரர்கள், மைத்துனி, பேரப்பிள்ளைகள்.

(சி/6454)

1916  1992

## அமரர் திருமதி செல்லம்மா இராஜப்பா

(கொக்குவில் கிழக்கு)

அன்புடனும், பண்புடனும் எம்மை வளர்த்து
ஆருயிராய் அரவணைத்த அன்புத் தெய்வமே,
இனி ''அம்மா'' என்று நாமழைக்க யாருளரோ
''அம்மம்மா'' என்றவுடன் அன்பாக உணவூட்டி
ஆசையுடன் எம்மை அன்பாக வளர்த்தெடுத்து,
இடையினிலே எம்மை திடீரென விட்டு ஏன் பிரிந்தீர்
''அம்மம்மா'' என்று நாமழைத்து ஓராண்டு ஆகிவிட்ட
- தம்மா
எம் உள்ளம் இருக்கும் வரை உங்கள் இனிய நினை
- வலைகள் என்றும் இருக்கும்.

தங்கள் ஆத்மா சாந்தியடைய பகவானைப் பிரார்த்திக்கின்றோம்.

''சிவஜீவா''
28, நாமகள் லேன்,
கொக்குவில்.


மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

[4722]

தண்டனை பற்றி ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று தெரிய வருகிறது.

### மோட்டார்

துள்ளனர். 21 - 4 - 93 முதல் ஆரம்பிக்கப்படவுள்ள இந் நடைமுறையில் முதற் கட்டமாக யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட மோட்டார் ஊர்தி உரிமையாளர்களிற்கான பதிவு மேற்கொள்ளப்படவுள்ளது. மேலதிக விபரங்களுக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள மோட்டார் ஊர்தி பதிவுச் செயலகத்தில் (முன்னைய வடபகுதிக்கு வெளியே செல்வோருக்கான அனுமதி வழங்கும் செயலகம்) தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.



வீரப்பிறப்பு:
10-01-1939

வீரக்கொடை
19-04-1988

''அன்னையாம் பூபதியெம் அல்லல்கள் களைந்தெறிய தன்னையே ஈந்தாள்; இந்தத் தரணியில் நாம் அறிவோம்.

தன்னலம்தனைக் களைந்து தமிழர்தம் வாழ்வுயர உன்னத நிலையடைந்த உத்தமியை நினைவு கொள்வோம்''

நினைவு கொள்வோர்:-

தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள்,
கொத்தணிகள்,
சமாசம்.

(சி/6453)

# அன்னை பூபதி நினைவு உண்ணாவிரத நிகழ்வு

## 19- 04- 1993

கண்ணுக்கு முன்னாலே - உரிமைக்காக
கருகி எரிந்ததனால்
பெண்ணுக்கு ஈழத்தில்
பெருமைகள் சேர்த்தவள்

மானத் தமிழ் மண்ணை மீட்க - தன்னை
தானம் கொடுத்த தமிழ்த்தாய்

எங்கள் ஈழத்தை இழந்து வாழ்வதா
எழுந்துவா என் தமிழ்க் குலமேயென
பொங்கி எழுந்து போர்முறை வகுத்த
புதுமைப்பெண் அன்னை பூபதி

உண்ணாமல் இருந்து – எம்
உரிமைக்காய் இறந்தவரை
எண்ணாமல் இருந்திட
ஈழத்தமிழரால் முடியாது



யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் 19-04-93 திங்கட்கிழமை காலை தொடக்கம் நடைபெறவிருக்கும் உண்ணாவிரதம் மற்றும் நிகழ்வுகளில் சகல வர்த்தகர்களும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொளகிறோம்.

**யாழ். வர்த்தகர் சங்கம்**

21, மேல்மாடி, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(4713)

### பதிவு செய்து கொள்ளுங்கள்

ஏகோபித்த வாடிக்கையாளர்கள் வருகையால் உங்கள் உணவுப் பார்சலுக்கு முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா உணவகம்

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை
சுண்டுக்குளி.

[சி-6438]

## மரண அறிவித்தல்

### செல்லமுத்து சிவகுரு

மயிலிட்டியைச் சேர்ந்த செல்லமுத்து சிவகுரு 17-4-93 அன்று அகால மரணமானார். இவர் சிவகுருவின் அன்பு மனைவியும் கந்தசாமி, சத்தியேஸ்வரி, பரமேஸ்வரி, சுப்பிரமணியம், நகுலேஸ்வரி, புவனேஸ்வரி, (போராளி சுருளினி), சண்முகராசா (மாவீரர் சுருளி), கருணேஸ்வரி ஆகியோரின் தாயாரும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் நாளை (19-4-93) காலை 10-00மணிக்குநடைபெறும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், போராளிகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:-

**கணவர், பிள்ளைகள்**

சிகரட் கம்பனி
8-ம் கட்டை,
தெல்லிப்பழை.

(சி/6460)

தமிழீழத்தின் தியாக தீபம்

# அன்னை பூபதியின் 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

உண்ணா விரதம்
19-03-1988



தியாகச் சாவு
19-04-1988

இம்மண்ணின் விடிவிற்காய் உயிர் நீத்த மாமணிக்கு எமது இதய அஞ்சலிகள்

18-04-93 இன்று கஸ்தூரியார் வீதி வின்ஸர் முன்பாக அன்னை பூபதியின் நினைவு கூரல் உண்ணா நோன்பு காலை 8 மணி தொடக்கம் மாலை 4மணிவரை இடம்பெற இருப்பதால் அனைத்து தமிழீழ மக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தமிழீழ நகைத் தொழிலாளர் சார்பாக
யாழ். மாவட்ட நகைத் தொழிலாளர் சங்கம்

(சி/6456)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.